**நுவரஎலிய பிரதேச சபை**
**நுவரஎலிய மாவடம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டிற்கான கொடுக்கல் வாங்கல்களின் செயற்பாடுகள் மற்றும் செயலாற்றுகை பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 09 திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் மற்றும் செயலாற்றுகை மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| இலக்கம் 218 | சபையின் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் | |
| (i) நிதிப் பிரமாணம் 189 | ரூபா 177,040 பெறுமதியான 6 காசோலைகள் மதிப்பளிக்கப்படாமல் 03 மாதங்கள் முதல் 34 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதும் அது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 371 | 2009 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான காலப்பகுதியில் 45 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த இது வரை தீர்க்கப்படாத ரூபா 5,193,262 தொகை மற்றும் 2015 ஆண்டின் போது 20 சந்தர்ப்பங்களில் வழங்கி தீர்க்கப்படாத ரூபா 13,842,229 தொகை ஆகக் கூட்டுத்தொகை ரூபா 19,035,491 தொகையான முற்பணங்கள் தீர்த்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| (iii) நிதிப் பிரமாணம் 571 | வைப்புச் செய்து 02 வருடங்களை மிகைத்துள்ள 49 சந்தர்ப்பங்களைச் சேர்ந்த ரூபா 1,557,401 தொகையான வைப்புக்களை ஆதனவளிப்புச் செய்திருக்கவில்லை. |
| (iv) நிதிப் பிரமாணம் 756 | வருடாந்த பண்ட மெய்மையாய்தல் மீளாய்வாண்டிற்காக நடத்தப்பட்டிருக்கவில்லை. |

## 1.3 வருமான நிருவாகம்

### 1.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| வருமான விடயம் | 2015.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | 2015 ஆண்டின் போது சிட்டையிடல் | அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை | ஆண்டின் போது சிட்டையிட்ட வைகளில் | 2015.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்து | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | | | | 2015.12.31 திகதியில் நிலுவை | | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 4,382,268 | 4,122,637 | 8,504,905 | 2,511,058 | 2,811,467 | 3,182,380 |
| வாடகை | 870,873 | 5,200,994 | 6,071,867 | 4,790,906 | 466,019 | 814,942 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | 3,991,174 | 3,991,174 | 3,991,174 | - | - |
| நீர்க் கட்டணம் | 1,388,171 | 2,178,026 | 3,566,197 | 1,233,916 | 996,411 | 1,345,870 |

### 1.3.2 வீத வரி

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3,182,380 தொகையான நிலுவை வீத வரி காணப்பட்ட போதிலும், 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 32 முதல் 42 வரையான ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்து நிலுவைத் தொகையை அறவீடு செய்திருக்கவில்லை.

### 1.3.3. வாடகை வருமானம்

21 கடைகள் தொடர்பாக 04 மாதம் முதல் 28 வரையான காலம் வாடகை நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் இது தொடர்பாக உடன்படிக்கைகளில் 07 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

வர்த்தக அனுமதிப்பத்திரம் மற்றும் கைத்தொழில்களுக்காக வரி என்பன காசு அடிப்படையில் கணக்குகள் பதியப்பட்டிருந்ததுடன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 59 இன் படி அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு சிட்டையிடப்பட்ட பின்னர் வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.5 நீர்க் கட்டணம்

நீர் நுகர்வோருடன் சபை மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் கட்டணங்கள் செலுத்தத் தவறும் சந்தர்ப்பங்களில் நீர்வழங்களைத் துண்டித்து நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 செயற்பாட்டுத் திறமையின்மை

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 19(xi) மற்றும் ஜனாதிபதி செயலாளரின் 2010 பெப்ரவரி 03 திகதிய CP/RD/02/10 இலக்க சுற்றறிக்கையின் 3:5 பிரிவிற்கு முரணாக 2015 ஏப்ரல் 30 திகதி சபையின் பொதுக் கூட்டத்தீர்மான இலக்கம் 03:05 இன் மூலம் 01 ஏக்கர் 2ரூட் 38.6 பர்சஸ் கிரிஸ்லஸ் பாம் என்ற காணி மாதாந்தக் குத்தகை அடிப்படையில் 37 துண்டுகளாகப் பகிரப்பட்டு உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. இங்கு காணிகளை பெறுவோர்களை தெரிவுசெய்யப்பட அடிப்படைக் கணக்காய்விற்கு விளக்கப்படவில்லை. அத்துடன் சபையின் 08 மந்திரிமார்களுக்கு மற்றும் 21 உத்தியோகத்தர்களுக்கு உடன்படிக்கையின் மூலம் காணித் துண்டுகள் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்தில் இருந்து கொள்வனவு செய்திருந்த ரூபா 60,000 பெறுமதியான 04 தொகுதி ஸாஸ்பான்கள் 2015 அக்தோபர் 15 திகதி வரை குறிப்பிட்ட நலன்புரிவோருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஜூன் 20 திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 67,129,547 தொகைக்கான தொங்கல் கணக்கு வரவு மீதியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபை அலுவலகம் நடத்தப்பட்டுவந்த கட்டிடம் 2015 மே மாதத்தில் உடைத்து அகற்றுவதற்காக தீர்மானித்த போதிலும் 2014 ஏப்ரல் முதல் 2015 ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில் முன் அலுகலகம் ஒன்றிற்காக ரூபா 950,052 தொகை செலவிடப்பட்டிருந்தது. புதிய கட்டிடம் நிர்மாணிப்பதற்காக பழைய கட்டிடத்தை 2015 மே மாதத்தில் உடைத்து அகற்றப்பட்டமையால் இந்த செலவு பயனற்ற செலவு ஒன்றாக மாறியிருந்தது.

### 2.3 ஒப்பந்த நிருவாகம்

#### 2.3.1 புதிய அலுவலக் கட்டிடத்தொகுதி நிர்மாணித்தல்

(அ) ரூபா 75,000,000 தொகை கிரய மதிப்பீட்டையுடைய செயற்திட்டத்திற்காக அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.1.1(இ) இன் பிரகாரம் நிதி ஏற்பாடுகள் கிடைக்கும் என உறுதிப்படுத்திக்கொள்ளாமல் உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து கடன்தொகை ஒன்று பெறும் நோக்குடன் பெறுகைகள் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு 2015 மே 15 ஆந் திகதி உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு வேலை ஆரம்பிக்கும் முற்பணமாக ரூபா 11,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் எதிர்பார்த்த கடன்தொகை பெற்றுக்கொள்ள முடியாமையால் ஒரு வருட காலமாக செயற்திட்டத்தின் விடயங்கள் நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரிவுகள் 2.3.2(ஆ) மற்றும் (இ) இன் படி செயற்திட்டம் ஒன்றிற்காக விலைகூறல் அழைப்பதற்கு முன்னர் விவரக் குறிப்பு உட்பட விலைகூறல் பதிவேடு தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(இ) விலை கேற்போர்களை தெரிவு செய்யும் போது விவரக் குறிப்புக்கள் என நுவரஎலிய மாவட்டத்தில் இதற்கு சமனான காலநிலைத் தன்மையில் கடந்த வருடத்தின் 100 மில்லியனை விட மிகைத்த வேலைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்ய ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும் என்ற விடயம் 2015 மார்ச் 03 திகதியில் சபைத் தீர்மானம் ஒன்றாக எடுக்கப்பட்டிருந்ததுடன் அச் சபைத் தீர்மானம் செயற்திட்டத்தின் விலைகோருவோர்களை தெரிவு செய்யும் முடிவான விவரக் குறிப்பாகக் காணப்பட்டது. எனினும் அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பந்தி 2.6.1(11) இன் பிரகாரம் அந்த விவரக் குறிப்புக்கள் இயற்கையாகவே ஆக்கப்பட்டவையா எனவும், சமமான மற்றும் நியாயமாக நிலையில் போட்டித் தன்மை மேம்படுத்த முடியும் எனவும் சான்றுபடுத்துவதற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு விலைகூறலை அழைப்பதற்கு முன்னர் மீளாய்வு செய்து சான்றுபடுத்தியிருக்கவில்லை.

(ஈ) அதே போல் பெறுகைகள் வழிகாட்டல் கோவையில் 5.6.1 இன் படி பெறுகைகள் குறிக்கோள்களை வெற்றி கொள்வதற்குத் தேவையான அளவை விட குறுகிய முறையில் விவரக் குறிப்புக்களை விவரிக்கக் கூடாது. எனினும் நோக்க ரீதியாக விவரக் குறிப்புக்கள் ஒடுக்கப்பட்டிருந்தன. மேற்கூறிய நிலைமையில் விவரக் குறிப்புக்களை வரையறுத்து விலைகூறல் மதிப்பிடப்பட்ட காரணத்தினால் குறைந்த பட்சம் ரூபா 8,426,532 தொகையான நட்டம் ஒன்று சபைக்கு ஏற்பட்டிருந்தது.

(உ) செயற்திட்டத்தின் உசாத்துணையாளருக்கு 2015 மார்ச் 25 திகதி ரூபா 5,000,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவருடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

**2.3.2 நானுஓயா நீர் வழங்கள் திட்டம்**

நானுஓயா நீர் வழங்கள் திட்டத்திற்காக 3.2 மிலிமீற்றர் கன அளவை உடைய 2 அங்குல சுற்றளவினை உடைய 70 ஜீ.ஐ. குழாய்கள் கொள்வனவு செய்யும் போது, சந்தையில் நிலவும் விலையை விடக் கூடுதலாக ஒரு குழாயுக்காக ரூபா 1,350 வீதம் ரூபா 94,500 தொகை ஒன்று அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**2.3.3 டொப்பாஸ் பாதையை அபிவிருத்தி செய்தல்**

நுவரஎலிய டொப்பாஸ் பாதையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் தொடர்பாக ரூபா 949,984 இற்கான சிட்டையில் ரூபா 5,000 பெறுமதியான பெயர்பலகை வெளிக்களத்தில் பொறுத்தியிருக்கவில்லை என 2015 ஜனவரி 29 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**2.4 செயற்திட்டங்களின் தாமதம்**

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்துவதற்காக ‘‘குப்பை போடுவது தடை’’ ‘‘வாகனங்கள் நிறத்துவது தடை’’ என பெயர் பலகைகள் தயாரிப்பதற்கான தேவையான பொருட்கள் வழங்குவதற்காக பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 705,510 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு பெயர்பலகை பொறுத்துவதற்காக கொள்வனவு செய்திருந்த பொருட்களில் பிரதேச சபை தொழல்நுட்ப உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டு பாதியளவு பூர்த்தி செய்திருந்த 51 பெயர்பலகைகள் மற்றும் 35 ஜீ.ஐ. பொக்ஸ் பார்கள் 2015 நவம்பர் 24 திகதியளவில் அலுவலக வளவில் கன்டேனர் ஒன்றில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

## 2.5 வாகனக் கட்டுப்பாடு

(i) 2012 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த CPYV-5082 கொண்ட முச்சக்கர வண்டியின் எரிபொருள் எரிவு 2013 ஆண்டு ஆகஸ்ட் மாதம் பரிசோதனை மேற்கொண்ட போது எரிபொருள் ஒரு லீட்டருக்கு 27 கி.மீ. ஆகக் காணப்பட்ட போதிலும் 2014 ஆகஸ்ட் மாதத்தில் அதனைப் பரிசோதனை செய்த போது எரிபொருள் ஒரு லீட்டருக்கு 18 கி.மீ. வரை கணிசமான அளவு வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.
இது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. அத்துடன் 2014 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் எரிபொருள் எரிவு பற்றி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) CPPB-9115 இலக்க கப் வண்டியின் மற்றும் CPJF-7441 டிரக்டர் வண்டியின் வருமான அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் முறையே 2015 ஜுன் மற்றும் ஆகஸ்ட் மாதங்களின் போது முடிவடைந்திருந்த போதிலும் முன்வரும் ஆண்டிற்கான வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக 2015 நவம்பர் 27 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

# 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 3.1 பெறுகைகள் திட்டம்

சபையின் கொள்வனவுகள் மற்றும் நிர்மாணவேலைகள் தொடர்பாக பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

## 3.2 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தின் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

# 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) கடன்பட்டோர் /கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்